**சார்பு நீதிமன்றம், போளூர்**

**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, போளூர்,**

2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**I.A.No.2/2025 in O.S.No:61/2022**

எலத்திரியான் ...மனுதாரர்/ வாதி

//எதிர்//

1. எல்லம்மாள் (இறந்தவர்)
2. சுள்ளி
3. சார்பதிவாளர், போளூர் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்னர் 26.11.2025 –ம் தேதியன்று முடிவாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.T.செம்பியன் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.K.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைக்குட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.

**ஆணையுரை**

அசல் வழக்கில் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர்/வாதியின் ஆணையுறுதி வாக்குமூலத்தின் சுருக்கம்: –**

மனுதாரர் இவ்வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் எல்லம்மாள் 2ம் எதிர்மனுதாரர் சுள்ளியை வாரிசாக விட்டுவிட்டு கடந்த 26.09.2019 அன்று இறந்துவிட்டார். எனவே அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்பதை 1ம் பிரதிவாதி இறந்தவர் என திருத்தம் செய்ய வேண்டும். எனவே, அசல் வழக்கில் திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

இந்த மனுவில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளையும் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர ஏனையவற்றை இந்த மனுதாரரே நிரூபிக்க வேண்டும். உண்மையில் 1ம் எதிர்மனுதாரர் உடல்நலக்குறைவால் 26.09.2019 அன்று 2ம் எதிர்மனுதாரர் சுள்ளியை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் அவரது இறுதி சடங்கிற்கு மனுதாரரும் கலந்துக்கொண்டார். மேலும் இவ்வெதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு எதிராக போளூர் உரிமையியல் நீதிமன்றத்தில் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் இறந்ததை திருத்தம் செய்துள்ள நிலையிலும் 1ம் எதிர்மனுதாரர் இறந்த விவரம் மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும் பொய்யான காரணங்களை கூறி இவ்வழக்கை சார்பு நீதிமன்றம் ஆரணியில் தாக்கல் செய்து, வழக்கை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 பிரிவு 17 கீழான இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

4. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஏதுவும் அளிக்கப்படவில்லை.

5. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் எல்லம்மாள் 2ம் எதிர்மனுதாரர் சுள்ளியை வாரிசாக விட்டுவிட்டு கடந்த 26.09.2019 அன்று இறந்துவிட்டார் என்றும், எனவே அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்பதை நீக்கம் செய்து 1ம் பிரதிவாதி இறந்தவர் என திருத்தம் செய்ய வேண்டும் என்றும், எனவே, அதைப்பொறுத்து மனுவில் திருத்தம் செய்ய அனுமதி வழங்குமாறு வாதிட்டார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் இறந்த விவரம் மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும் பொய்யான காரணங்களை கூறி அசல் வழக்கை தாக்கல் செய்து, வழக்கை கால தாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

6. மேற்கண்ட இருதரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும், நன்கு ஆராய்ந்து பரிசீலனை செய்ததில், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை

அனுமதிப்பதற்கு கடுமையான ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் 1ம் பிரதிவாதி எல்லம்மாள் 2ம் பிரதிவாதி சுள்ளியை வாரிசாக விட்டுவிட்டு கடந்த 26.09.2019ம் தேதி இறந்துவிட்டார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். இந்நிலையில், இம்மனுவில் சொல்லப்பட்ட திருத்தமானது வழக்கு பிரச்சனையை தீர்மானிக்க அவசியமான ஒன்றாகிறது. அத்துடன் இம்மனுவை அனுமதிக்கும்பட்சத்தில், 2ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்பில்லை என்பதை கருத்தில் கொண்டும், இதே பூசல் சம்பந்தமாக தரப்பினருக்கிடையே கூடுதல் வழக்குகள் தோன்றாமலிருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், நமது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 2008(5) CTC 548 என்ற வழக்கில் தரப்பினர்களுக்கிடையே கூடுதல் வழக்குகள் தோன்றாமலிருப்பதற்காக தீர்ப்புரை பகருவதற்கு முன்பாக கூட திருத்தம் செய்யும் மனுவை அனுமதிக்கலாம் என்று தெளிவுபடுத்தியுள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிப்பது தான் நீதியின்பால் சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்ய கோரியிருந்த இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2025.12.05 17:52:28 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2025.12.05 17:52:34 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**